# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 14/பேரூ/2024**
**நாள் : 25.09.2024**

திரு. K. வடிவேலு,
சங்ககிரி,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, கன்னந்தேரி போஸ்ட், காட்டுவளவு, பொந்தனூர், க. எண். 8/231/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. வடிவேலு, என்பவரின் 16.02.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.02.2024 அன்று பெறப்பட்டு, 14/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சங்ககிரி தாலுக்கா, கன்னந்தேரி போஸ்ட், காட்டுவளவு, பொந்தனூர், க. எண். 8/231/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. வடிவேலு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

1. சங்ககிரி டவுன் சின்னாகவுண்டனூர் கிராமம் வாணியர் காலனி பழைய வார்டு 4, புதிய வார்டு 7–ல் (1) நத்தம் சர்வே எண் 548/4 AL As per resurvey நத்தம் சர்வே எண். 755/2, 806/ sqft. (2) நத்தம் சர்வே எண் 548/4 AL As per resurvey நத்தம் சர்வே எண். 755/3, 747/ sqft ஆகிய நிலத்தில் Door No. 1/16.3A, 3பி, 3சி, 3டி ஆகிய நான்கு அடுக்குமாடி கட்டடம் திரு. K. சென்னகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமானது. மேற்படி அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என்று கடந்த 16.08.2023 தேதியில் சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அனுப்பியிருந்தேன்.

2. 16.08.2023 தேதியிட்ட எனது புகார் மனு பெயரில் அப்போதைய செயல் அலுவலர் திரு. வ.சுலைமான் சேட் என்பவர் மேற்படி அடுக்குமாடி குடியிருப்பை 16.10.2023 அன்று கள ஆய்வு செய்து (ந.க.எண். 586/2023/அ3) ஆய்வறிக்கையை கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் 31.10.2023 தேதியில் ( Form IV ) நோட்டீஸ் வழங்கி 60 நாட்களுக்குள் அனுமதிக்கு மாறாக உள்ள கட்டடத்தை இடித்து அகற்ற உத்திரவு வழங்கப்பட்டது (Roc No. 586/2023, Date 31/10/2023) (Form IV).

3. 31/10/2023 தேதியில் ( Form IV ) வழங்கி 60 நாட்கள் கெடு முடிவுற்ற நிலையில் மேலும் 50 நாட்கள் கடந்து விட்ட பின்னரும் தற்போதைய செயல் அலுவலர் திருமதி ஜி.உஷா என்பவர் அனுமதிக்கு மாறாக உள்ள கட்டடத்தை இடித்து அகற்ற நடவடிக்கை எடுக்காமல், கட்டட உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

4. கனம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (நடுவர் அவர்கள்) எனது இந்த புகார் மனுவை பரிசீலித்து மேற்படி அடுக்குமாடி குடியிருப்பு வீட்டின் உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்டு வரும் சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி ஜி.உஷா என்பவரை விசாரித்து அனுமதிக்கு எதிராக உள்ள கட்டடத்தை அகற்ற வேண்டி ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

5. மேலும் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் குடியிருப்பு வாசிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அடுக்குமாடி குடியிருப்பின் அடி சுவர் மற்றும் அதன் உறுதித் தன்மையை இழந்துள்ளது. எனவே கனம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்கள் பொது நலன் கருதியும், அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் பொது மக்களின் நலன் கருதியும் சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி ஜி.உஷா என்பவரை விசாரித்து விசாரணையின் அடிப்படையில் அனுமதிக்கு எதிராக கட்டியுள்ள கட்டடத்தை இடித்து அகற்ற உத்தரவிடுமாறு தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் சேலம் மாவட்டம், சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) சேலம் மாவட்டம், சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 28.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம், கன்னந்தேரி அஞ்சல், பொந்தனூர், காட்டு வளவு திரு. குப்பக்கவுண்டர் மகன் திரு. வடிவேலு என்பவரால் சங்ககிரி பேரூராட்சி வார்டு எண்.7 வாணியர் காலனி, கதவு எண்கள் 1/16/3, 1/16/3A, 1/16/3B, 1/16/3C, 1/16/3D, 16/3A/A1 கொண்ட கட்டடங்கள் கட்டட விதிமுறைகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ளதாக 17.08.2023 அன்று புகார் அளித்ததன்படி, 04.09.2023ஆம் தேதிய சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலக அறிவிப்பின் (படிவம் 1) படி கட்டட வரைபட அனுமதி, சொத்துவரி ரசீது மற்றும் ஆவணங்களை 15 தினங்களுக்குள் அளிக்க தெரிவித்து, கட்டடத்தின் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அதனை மனுதாரரால் பெற்றுக்

கொள்ளாமல் இப்பேரூராட்சிக்கு திரும்பப் பெறப்பட்டதையடுத்து. திரு.கே. சென்னகிருஷ்ணன் என்பவர் தற்சமயம் வசித்து வரும் முகவரியான சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஏடீசி அவென்யு பகுதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்த அறிவிப்பினை திருமதி. எஸ். உமாதேவி என்பவரால் 12.09.2023 அன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் திரு.கே. சென்னகிருஷ்ணன் என்பவரிடமிருந்து உரிய ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனையடுத்து பேரூராட்சி அலுவலக அறிவிப்பின்படி மேற்படி கட்டடத்தினை 16.10.2023 அன்று சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலரால் ஆய்வு செய்யப்பட உள்ளதை பதிவஞ்சல் மூலம் திரு. சென்னகிருஷ்ணன், த/பெ. குப்புசாமி என்பவருக்கு படிவம் II மூலம் தகவல் தெரிவித்தும் உரிய ஆவணங்களுடன் உடனிருக்கவும் தெரிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை திருமதி. எஸ். உமாதேவி என்பவரால் 11.10.2023 அன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி திரு. சென்னகிருஷ்ணன், த/பெ. குப்புசாமி என்பவருக்கு சொந்தமான மேற்குறிப்பிட்ட குடியிருப்புக் கட்டடம் 16.10.2023 அன்று சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் போது கட்டடத்தின் உரிமையாளரான திரு. சென்னகிருஷ்ணன், த/பெ. குப்புசாமி என்பவர் ஆஜராகி ஆவணங்கள் ஏதும் அளிக்கவில்லை. மேற்படி கட்டடம் அளவீடு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விவரங்கள் ஆய்வின் போது தெரியவருகிறது.

i) மேற்படி கட்டடம் முழுமையாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

ii) மேற்படி கட்டடத்திற்கு சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி கட்டட உரிய அனுமதி ப.மூ.எண். 640/2012 நாள் 21.12.2012 இன் படி 1241.56 சதுர அடி தரை தளம் (வாகன நிறுத்துமிடம்) 967.56 சதுர அடி முதல் தளம் மற்றும் 967.56 சதுர அடி இரண்டாம் தளம் ஆகியவற்றிற்கு கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

iii) வரைபட அனுமதியில் அகலம் 34.3" மற்றும் நீளம் 28.3" என்ற அளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அனுமதிக்கு மாறாக அகலம் 36.9" மற்றும் நீளம் 40.2" என்ற அளவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

iv) தரைதள வாகன நிறுத்துமிடத்தில் அனுமதிக்கு மாறாக 30'7" x 8 '2'' என்ற அளவில் ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது.

v) முதல் தளத்தில் இரண்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது. இவற்றின் உள் அமைப்பு அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது.

vi) இரண்டாம் தளத்தில் இரண்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது. இவற்றின் உள் அமைப்பு அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது.

vii) மூன்றாம் தளத்தில் அனுமதி பெறாமல் 11'8" x 15'6" என்ற அளவில் ஒரு வீடும் அதன் மேல் நான்காம் தளத்தில் அனுமதியின்றி ஒரு கட்டடமும் அதனருகில் நீர் தேக்கத் தொட்டியும் கட்டப்பட்டுள்ளது.

viii) கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதற்கு முடிவுச் சான்றிதழ் ஏதும் சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சியின் மூலம் வழங்கப்படவில்லை.

ix) கட்டடத்தின், தரைதளத்தில் ஒரு வரி விதிப்பும், முதல் தளத்தில் உள்ள இரண்டு வீடுகளுக்கு இரண்டு (2) வரிவிதிப்பும், 2–ம் தளத்தில் உள்ள இரண்டு வீடுகளுக்கு இரண்டு (2) வரி விதிப்பும் 3–ஆம் தளத்தில் ஒரு வரி விதிப்பும் ஆக மொத்தம் (6)ஆறு வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | வரிவிதிப்பு எண். | கதவு எண். | கட்டடத்தின் விவரம் | சொத்துவரி மற்றும் கேட்பு திடக்கழிவு மேலாண்மை சேவை கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 3051 | 1/16/3 | தரைதளம் – வாகன நிறுத்துமிடம் | ரூ.516/– |
| 2 | 3023 | 1/16/3A | முதல் தளம் – வீடு | ரூ.1116/– |
| 3 | 3024 | 1/16/3B | முதல் தளம் – வீடு | ரூ.1116/– |
| 4 | 3025 | 1/16/3C | இரண்டாம் தளம் – வீடு | ரூ.1114/– |
| 5 | 3026 | 1/16/3D | இரண்டாம் தளம் – வீடு | ரூ.496/– |
| 6 | 3048 | 16/3A/A1 | மூன்றாம் தளம் – வீடு | ரூ.156/– |

x) மேற்படி கட்டடத்திற்கு ஆழ்குழாய் கிணறு மற்றும் பேரூராட்சி மூலம் கீழ்க்கண்டவாறு 4 குடிநீர் இணைப்புகள் பெறப்பட்டுள்ளது. மேலும் மின்சார வசதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | குடிநீர் இணைப்பு எண். | கதவு எண். | கட்டடத்தின் விவரம் | குடிநீர் கேட்பு தொகை |
|---|---|---|---|---|
| 1 | 564 | 1/16/3 | தரைதளம் – வீடு | ரூ.1800/– |
| 2 | 1393 | 1/16/3A | முதல் தளம் – வீடு | ரூ.1800/– |
| 3 | 2951 | 1/16/3C | இரண்டாம் தளம் – வீடு | ரூ.1800/– |
| 4 | 2950 | 1/16/3D | இரண்டாம் தளம் – வீடு | ரூ.1800/– |

சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலக கடிதத்தின்படி கட்டட அனுமதிக்கு முரணாக கட்டப்பட்ட கட்டடத்தினை 60 நாட்களுக்குள் இடித்து அப்புறப்படுத்திட பதிவஞ்சலில் அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில் அதனை திருமதி. எஸ். உமாதேவி என்பவரால் பெறப்பட்டுள்ளது. ஆனால் 29.11.2023 அன்று திரு. சென்னகிருஷ்ணன் த/பெ. குப்புசாமி என்பவரின் தொலைபேசி தகவலில் மேற்படி கடித நகல் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டதையடுத்து, திரு. சென்னகிருஷ்ணன் த/பெ. குப்புசாமி என்பவருக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டும், அறிவிப்பு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்ட நாட்களுக்குள் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை அப்புறப்படுத்திடவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை திரு. சென்னகிருஷ்ணன் த/பெ. குப்புசாமி என்பவரால் அப்புறப்படுத்தப்படாததால் சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலக கடிதத்தின்படி அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை ஏழு (7) தினங்களுக்குள் அப்புறப்படுத்திடவும், தவறும்பட்சத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு மற்றும் கட்டட விதிகள் 2022 இன்படி பேரூராட்சியின் மூலம் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை அப்புறப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் திரு. சென்னகிருஷ்ணன் த/பெ. குப்புசாமி என்பவருக்கு தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து 10.02.2024 நாளிட்ட திரு. சென்னகிருஷ்ணன் என்பவரின் விண்ணப்பத்தில் மேற்படி கட்டடமானது பேரூராட்சி அலுவலகத்தில் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளதாகவும், அதற்கான ஆவணங்களை பேரூராட்சிக்கு நான்கு வாரம் கழித்து சமர்ப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால்,

ஆவணங்கள் ஏதும் திரு. சென்னகிருஷ்ணன் த/பெ. குப்புசாமி என்பவரால் பேரூராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

எனவே 30.07.2024 நாளிட்ட சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலக அறிவிப்பு கடிதத்தின்படி பதினைந்து (15)தினங்களுக்குள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை அப்புறப்படுத்திடவும், தவறும் பட்சத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு மற்றும் கட்டட விதிகள் 2022 இன்படி பேரூராட்சியின் மூலம் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை அப்புறப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் திரு. சென்னகிருஷ்ணன் என்பவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கட்டட விதிகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தினை அப்புறப்படுத்துவதை எதிர்த்து திரு. சென்னகிருஷ்ணன் த/பெ. குப்புசாமி என்பவரால் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (எண்.O.S.No.73/2024) தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4) சேலம் மாவட்டம், சங்ககிரி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு K. வடிவேலு என்பவர் தனது 16.02.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்கள் 548/AL, 548/4A, 755/2 மற்றும் 755/3 (பழைய வார்டு எண்.4, புதிய வார்டு எண். 7 வாணியர் காலனி) ஆகியவற்றில் திரு. K. சென்னகிருஷ்ணன் என்பவர் பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் உள்ள பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி G. உஷா என்பவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

5) மேற்காணும் மனுதாரரின் புகார் மனு குறித்து, சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை ஆய்வு செய்யப்பட்டதில், சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 16.10.2023 அன்று கட்டடத்தை நேரடி ஆய்வு செய்யப்பட்டு, பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டடம் கட்டப்பட்டுள்ளதை உறுதி செய்யப்பட்டது. எனவே அனுமதியற்ற கட்டடத்தை அகற்றிடக் கோரி பேரூராட்சி செயல் அலுவலரால் 31.10.2023, 29.11.2023 02.02.2024 மற்றும் 30.07.2024 ஆகிய தேதிகளில் உரிய அறிவிப்புகள் கட்டட உரிமையாளர் திரு. சென்னகிருஷ்ணன் என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளதை செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

இதற்கிடையில் சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் கட்டட அனுமதிக்கு முரணாக கட்டப்பட்ட கட்டடத்தை அகற்றக் கோரி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையினை எதிர்த்து, கட்டட உரிமையாளர் திரு. சென்னகிருஷ்ணன் என்பவரால் மாண்பமை சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண்.O.S.No.73/2024) தொடரப்பட்டு, அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால் இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் 25 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. K. வடிவேலு,
த/பெ குப்பகவுண்டர்,
8/231/1, பொந்தனூர்,
காட்டுவளவு, கன்னந்தேரி போஸ்ட்,
சங்ககிரி தாலுகா,
சேலம் மாவட்டம் – 637 102.

2. செயல் அலுவலர்,
சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

26/9/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032